DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.456/2016**

**P.W.19**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

| | | |
|---|---|---|
| NAME | : | ரெங்கநாதன் |
| Father Name | : | ராதாகிருஷ்ணன் |
| VILLAGE | : | |
| CALLING | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.06.2025.

(3 மற்றும் 7 எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்டார்கள். 2வது எதிரி ஆஜர். 1வது எதிரி ஆஜர் இல்லை, 1வது எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது கற்பகம் நகரில் குடியிருக்கிறேன். நான் ஹோட்டல் வைத்து நடத்தி வருகிறேன். இந்த வழக்கு சம்பவ சமயத்தில் புதூர் அழகர் நகரில் அபிராமி டிப்பன் சென்டர் என்ற பெயரில் ஹோட்டல் வைத்து நடத்தி வந்தேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 21.11.2015ம் தேதி இரவு சுமார் 11.10 மணியளவில் என்னுடைய டிப்பன் சென்டருக்கு பக்கத்தில் குரு சலூன் கடை அருகில் முன்பு நிறுத்தியிருந்த காரை எடுக்க முயன்ற நபர் திடீரென்று சத்தம் போட்டுக்கொண்டு ஓடி வந்தார் என்றும், அப்போது நானும் என் கடைக்கு பக்கத்தில் டீக்கடை வைத்திருந்த கேசியர் முன்னம்பலை என்பவரும் என்ன

என்று அருகில் சென்று பார்த்தோம் என்றும், அப்போது கற்பகம் நகரை சேர்ந்த சகாய பிரவீன் என்பவர் கத்தியுடன் அங்கு நின்றுகொண்டிருந்தார் என்றும், எங்களை பார்த்து மிரட்டினார் என்றும், அங்கிருந்தவர்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள் என்றும், சம்பவ விவரத்தை குரு சலூன் கடை உரிமையாளர் அர்ஜுணன் மூலமாக தெரிந்து கொண்டேன் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>** இல்லை.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.